தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
23.1.2024 (செவ்வாய்க்கிழமை)



### அவசர காலங்களில்

# டிரோன் மூலம் மருந்து பொருட்கள் அனுப்ப சோதனை

திருக்கனூர், ஜன.23-

மத்திய அரசின் மூலம் கிராமப்புற மருத்துவமனைகளுக்கு அவசர காலத்தில் டிரோன் மூலமாக மருந்து பொருட்கள் அனுப்புவதற்கான புதிய திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக தெரிகிறது. அதன் முன்னோட்டமாக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலிருந்து போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட அவசர காலங்களில் டிரோன் மூலம் மண்ணாடிப்பட்டு சமுதாய நலவழி மையத்திற்கு மருந்து பொருட்களை அனுப்புவதற்காக சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ஜிப்மர் குழுவினர் மண்ணாடிப்பட்டு கிராமத்தில் இருந்து நேற்று மருந்து பொருட்களை வைத்து டிரோனை இயக்கி பார்த்தனர்.

தினகரன்
ஜனவரி 23, 2024 செவ்வாய்க்கிழமை

### ஜிப்மர் நிர்வாகம் சார்பில்

# ட்ரோன் மூலம் மருந்து கொண்டு வரும் சோதனை ஓட்டம்



திருக்கனூர், ஜன. 23: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை நிர்வாகம் சார்பில் ட்ரோன் மூலம் மருந்து வரவழைப்பது குறித்த சோதனை ஓட்டம் நேற்று திருக்கனூர், மண்ணாடிப்பட்டு சமுதாய நல வழி மையம் அருகே உள்ள திரவுபதி அம்மன் கோயில் திடலில் நடந்தது. இதில் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு அவசர கால மருந்துகள் தேவைப்படும்போது அந்த மருந்துகள் ஜிப்மர் மருத்துவமனையில் உள்ளது என்றால் உடனே அவசர மருத்துவ சேவைக்கு கொண்டுவர இந்த ட்ரோன் பயன்படுத்தி மருந்துகள் கொண்டு வரலாம் என்று ஜிப்மர் நிர்வாகம் நேற்று சோதனை ஓட்டம் நடத்தியது. இதில் ஜிப்மர் நிர்வாக அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.